ராணி
காமிக்ஸ்
ஜேம்ஸ்பாண்டு 007
வேட்டையாடும்
நாக தேவதை
வண்ணப் படக்கதை

மரம் வளர்ப்போம்!

காட்டை அழித்தோம்,
மரம் இல்லை!

மரத்தை அழித்தோம்,
மழை இல்லை!

மழையை இழந்தோம்,
வளம் இல்லை!

வளத்தில் குறைந்தோம்,
நலம் இல்லை!

மரம் வளர்த்தால்
மழை பெறலாம்!

மரம் வளர்ப்போம்,
மகிழ்வுறுவோம்!

—அரி.இல. தமிழடியான், உளுந்தூர்பேட்டை

ராணி காமிக்ஸ் – 474
(மாதம் இருமுறை இதழ்)

மார்ச்சு 16, 2004.

ஜேம்ஸ்பாண்டு 007

வேட்டையாடும்

நாகதேவதை

இங்கிலாந்து இரகசியப் போலீஸ் தலைவர், மிஸ்டர் எம். அவருடைய செயலாளர், அழகு மங்கை பென்னி. அவள், வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தாள். நள்ளிரவில்
புஸ்...
'புஸ்' என்ற ஒலி கேட்டு, பென்னி விழித்துக்கொண்டாள்!
ஆ! பாம்பு... பாம்பு...
யாராவது ஓடிவாங்களேன்!
யாரையும் காணோமே!

பாம்பு, கழுத்தைச் சுற்றி நெருக்க,
அவள் எண்களைச் சுழற்றினாள்!
டிரிங்... டிரிங்...
போன் சத்தம் கேட்டு மிஸ்டர் எம். விழித்துக் கொண்டார்.
அலோ...
பென்னி...
பென்னி...

பென்னி... பென்னி... உனக்கு என்னாச்சு...?
மிஸ்டர் எம். குழம்பிப் போய்...
அலோ...
ஜேம்ஸ்... பென்னிக்கு ஏதோ ஆபத்து... உடனே ஓடுங்கள்!
இந்த இரவில் என்ன ஆபத்து?
போன் செய்து பார்க்கலாமா?
நேரில் போய்விடுவதுதான் நல்லது!

ஜேம்ஸ் வெளியில் வந்தார்.
என் காரில் ஆள்...
யாரடா நீ?
அவன் தப்பி ஓட முயன்றான்!
விடக்கூடாது!
ஆ!
கும் என்று ஒரு குத்துவிட்டார்!
யார் நீ? என் காரில் உனக்கு என்ன வேலை?

அவன் கத்தியை எடுத்தான்!
படார்!
அப்போது மின்னல் வேகத்தில் ஒரு கார் வந்தது!
கார் முன்னே அவன் விழுந்தான்!
பெரிய சதிக்கூட்டம் போலிருக்கிறதே!

கார், சடன் பிரேக் போட, அவன் எழுந்து ஓடினான்!
அவனைப் பிறகு கவனிப்போம்! முதலில் பென்னியைக் காப்பாற்ற வேண்டும்!
தனது காரில் 'டைம்பாம்' இருந்ததை ஜேம்ஸ் பார்த்தார்!
என்னைக் கொல்லக் குண்டு வைத்திருக்கிறான்!


குண்டைத் தூக்கி எறிந்துவிட்டு, ஜேம்ஸ் விரைந்தார்!
பென்னிதான் முக்கியம்!
கதவு பூட்டப்பட்டிருந்தது!
டமார்!
கதவை உடைத்துக்கொண்டு உள்ளே புகுந்தார்!
ஆ... பாம்பு!

ஜேம்ஸ் வேகமாகச் செயலில் இறங்கினார்!
டுமீல்!
பாம்பு செத்து விழுந்தது!
பென்னி! உனக்கு ஆபத்து இல்லையே?
கழுத்து எலும்பு முறிந்துவிட்டதா என்று பார்க்க வேண்டும்!
விரைந்து வந்து என் உயிரைக் காப்பாற்றினீர்கள். மிகவும் நன்றி, ஜேம்ஸ்!


அடுத்த நாள்... இரகசிய போலீஸ் தலைமை நிலையம்.
பென்னி அறைக்குள் பாம்பு எப்படிப் புகுந்தது?
ஏற்கனவே பல நாடுகளில் பாம்பு தாக்கிப் பலர் இறந்திருக்கிறார்கள்!
பாம்பு கடிப்பது சாதாரணம்தானே?
இது சாதாரணம் அல்ல. பெரிய அதிகாரிகள், இராணுவ தளபதிகள் பாம்பு கடித்துச் செத்தார்கள்!
செத்த எல்லோரும் அணு ஆயுதங்களைப் பராமரிப்பவர்கள்!
அணு அயுதங்களை எதிர்க்கும் கூட்டம் இப்படிச் செய்கிறதா?

நாகதேவதை பற்றி இப்போது நினைவு வருகிறது.
பாடகிதானே?
அவளைப் பற்றிய வீடியோ கேசட்டு இருக்கிறது. பார்ப்போம்!

வீடியோ கேசட்டு பார்த்தார்கள்
அவள் பாம்புகளுடன் மேடையில் தோன்றிப் பாடுவாள். எனவே, நாகதேவதை என்று சொல்லப்பட்டாள்.
அவள் அணு ஆயுத எதிர்ப்பு இயக்கத்தைச் சேர்ந்தவள்.
அணுகுண்டுகள் இந்த உலகத்தையே அழித்துவிடும்!

இந்த நாகதேவதைதான் பாம்புகளை அனுப்பி, அணு விஞ்ஞானிகளைக் கொல்லுகிறாளா?
அப்படி ஏன் இருக்கக் கூடாது?

நாகதேவதை இப்போது லண்டனில்தான் இருக்கிறாள். அவள்தான் பென்னியைக் கொலை செய்ய முயற்சித்தாளா?
இதைக் கண்டுபிடிக்க வேண்டும்! ஜேம்ஸ், இப்போதே உங்கள் வேலையைத் தொடங்குங்கள்!
நட்சத்திர ஓட்டலில் நாகதேவதை தங்கியிருந்தாள். ஜேம்ஸ் அங்கே போனார்.
நான் டெய்லி மிரர் நிருபர் மில்டன் பேசுகிறேன். நாகதேவதை அறைக்குக் கொஞ்சம் இணைப்புக் கொடுங்கள்!

முதலில் உங்களை சோதிக்க வேண்டும்!
யார் சோதிப்பது?
நான்தான்!
நீங்கள் நிருபரா? அதற்கு என்ன அத்தாட்சி?
இதோ, அரசு அங்கீகார அத்தாட்சி.

அதெல்லாம் இங்கே செல்லாது!
என்னைத் தடுக்க நீ யார்?
நானா... காட்டுகிறேன்!
கும்!
என் கை பூப்பறிக்கப் போகாது!
படார்!

இங்கே என்ன கலாட்டா?
இந்த ஆள் திடீர் என்று மயங்கி விழுந்துவிட்டார்!
இவர் நாகதேவதையின் ஆள். அவளது அறைக்கு இவரைக் கொண்டு போகிறேன்.
அவளது அறை எண் என்ன?
770
சத்தமில்லாமல் நட!
ஆர்தர்... என்ன இது? அவன் யார்?
பத்திரிகை நிருபராம்! பொய் சொல்லுகிறார்!!

திடீர் என்று...
நீயும் தொலைந்து போ!

பத்திரிகை நிருபர்களிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று இனியாவது கற்றுக்கொள்ளுங்கள்!


அங்கே என்ன சத்தம்?
ஏ மிஸ்டர்! நாகதேவதை வருகிறார்கள்!

யார் நீங்கள்?
டெய்லி மிரர் நிருபர். மில்டன் என்று பெயர்.
ம்கிழ்ச்சி!

உங்களைப் பார்க்க வந்தேன்!
என் பேட்டிதானே வேண்டும்?

உள்ளே வாங்க!

பேட்டி கொடுத்துக் கொண்டிருந்தபோது...
மேடம்! வெளியே வாங்க! டி.வி. பாருங்கள்!
நாகதேவதை வெளியே வந்தா
அப்படி என்ன முக்கியச் செய்தி?
நமது கடல் எல்லைக்குள் ஒரு ராட்சதப் பாம்பு புகுந்து விட்டது! ஒரே களேபரம்!

இரகசியப் போலீஸ் தலைமை நிலையத்திலும் டி.வி. பார்த்தார்கள்.
இப்படி ஒரு கடல் பாம்பே இல்லை என்று கடலியல் நிபுணர்கள் சொல்லுகிறார்கள்!
பாம்பு மர்மம் விரிந்துகொண்டே போகிறதே!
இந்த மர்மத்துக்கு முடிவுகட்ட வேண்டும்! நாகதேவதையைப் பார்க்கப் போயிருக்கும் ஜேம்ஸ்பாண்டை அழைத்து, உடனே நேரில் போய் பாம்பைப் பார்க்கச் சொல்லுங்கள்!

இராணுவ ஹெலிகாப்டரில் 007 பறந்தார் !
இந்தக் குகைக்குள் பாம்பு புகுந்துவிட்டது !
துணிச்சலான ஒரு நிருபர், பாம்பைப் பார்க்கக் குகைக்குள் போனார் !
அவர் கதி என்ன ஆயிற்று?

தீக்காயங்களுடன் நிருபர் வெளியே வந்தார்
உடல் முழுக்க எரிச்சல்! என்னைக் காப்பாற்றுங்கள்!!
அதேநேரம், ஓட்டல் அறையில்...
மேடம்! உங்களைப் பார்க்க டி.வி. ஆட்கள் வந்திருக்கிறார்கள்!


நீங்கள் ஏன் பாம்பை கழுத்தில் சுற்றிக்கொண்டு பாடுகிறீர்கள்?
ஊழிக்காலத்தில், உறங்கிக்கொண்டிருக்கும் ஒரு இராட்சதப் பாம்பு எழுந்து உலகத்தை அழிக்கும் என்று ஒரு புராணக் கதை உண்டு. அணுகுண்டுதான் அந்தப் பாம்பு! இதைச் சொல்லவே பாம்புடன் பாடுகிறேன்!

இப்போது இங்கிலாந்துக் கடலில் தோன்றியிருக்கும் பாம்புகூட, அந்த ஊழிக்காலப் பாம்பாக இருக்கலாம்!

ஜேம்ஸ்டாண்டு உடனே விசாரணையைத் தொடங்கினார்.
கடற்கரையில் ஏது குகை?
அது குகை அல்ல. மூட்டப்பட்ட ஒரு நிலக்கரிச் சுரங்கம்!
ஏன் மூடிவிட்டார்கள்?
இந்தப் பகுதி முழுவதுமே முன்பு நிலக்கரி கிடைத்தது. இப்போது இல்லை. எனவே, மூடிவிட்டார்கள்!

அந்தச் சுரங்கம் யாருக்குச் சொந்தம்?
இப்போது மார்டின் என்ற ஜெர்மன் தொழிலதிபர் வாங்கியிருக்கிறார்!

ஒரு வாரம் ஓடியது.
மேடம்! ஜெர்மன் தொழிலதிபராம். பெயர் மார்டின். உங்களைப் பார்க்க காத்திருக்கிறார்.

மிஸ்டர் மார்டின்! உள்ளே வாங்க!!
பாம்பு கடிக்காதே!

நீங்கள்தான் கடிப்பீர்கள் போலிருக்கிறது!
இது அன்பு முத்தம்!


கச்சேரிக்கு ஒப்பந்தம் செய்ய வந்தீர்களா?
ஆமாம்! பாம்பைக் கழுத்தில் சுற்றிக்கொண்டு நீங்கள் அணு எதிர்ப்புப் பாடல் பாடுவது எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது!

அணுகுண்டுதான் ஊழிக்காலப் பாம்பு! ஒருநாள் உலகை அழிக்கப்போகிறது!
இதையே கதையாக வைத்து நான் ஒரு திரைப்படம் தயாரிக்கப் போகிறேன். அதில் நீங்கள் நடிக்க வேண்டும்!

மகிழ்ச்சியுடன் நடிக்கிறேன்!
ஒரு இராட்சதப் பாம்பும் நடிக்கிறது!
கடலில்கூட ஒரு இராட்சதப் பாம்பு தோன்றியதே?
அது இப்போது ஒரு சுரங்கத்துள் பதுங்கியிருக்கிறது. அந்தச் சுரங்கம் எனக்குச் சொந்தமானது. எனது விமானத்தில் போனால் ஒரு மணி நேரத்தில் அங்கே போய்விடலாம்!

இருவரும் விமானத்தில் பறந்தார்கள்!
என்னுடன் சேர்ந்து அந்தப் பாம்பும் நடிக்கும் என்று சொல்லுங்கள்!
அந்தப் பாம்பைப் படத்தில் காட்டுவோம், அவ்வளவுதான்!

அது பயங்கரப் பாம்பாமே? எப்படிப் படம் எடுப்பீர்கள்?
அதைத் தனியே படம் எடுக்கத்தான் சுரங்கத்தில் அடைத்து வைத்திருக்கிறேன்! பிறகு கணினியில் உங்களையு பாம்பையும் சேர்த்துவிடலாம்!

கடற்கரைக்கு வந்தார்கள். ஒரு படகில் ஏறினார்கள்!
கடலில் எங்கே போகிறோம், மார்டின்?
சுரங்கத்துக்குள் செல்ல, கடலிலிருந்தும் ஒரு பாதை இருக்கிறது. அது வழியேதான் பாம்பு சுரங்கத்துள் வந்தது.
படகிலிருந்து இறங்கி, சுரங்கத்துள் நடந்தார்கள்.
பாம்பினால் ஆபத்து எதுவும் ஏற்படாதே?
தகுந்த பாதுகாப்புகள் செய்யாமல், உங்களை அழைத்து வருவேனா?
அதேநேரம்... சுரங்கத்தின் முன்வாசலில்..
நான் டெய்லி மிரர் நிருபர். இராட்சதப் பாம்பைப் பார்க்க வேண்டும்.
சுரங்கத்துள் செல்ல அனுமதி பெறவேண்டும்!

ஜேம்ஸ்பாண்டு படம் எடுத்தார்!
மூடப்பட்ட சுரங்கத்துக்கு இவ்வளவு காவல் ஏன்?
ஏ மிஸ்டர்! இங்கே படம் எடுக்கக்கூடாது
கேமரா, ஒளியை உமிழ... காவலாளிகளின் கண்கள் கூசின!
ஏ மிஸ்டர்! நிறுத்து!
அவர்கள் கண்ணை மூடியிருந்த நேரத்தில்...
கும்!

படார்!
மயங்கிவிட்டான்!
ஜேம்ஸ், சுரங்கத்துள் நுழைந்தார்.
யாருமில்லை!


பாம்பு பதுங்கி இருக்குமோ?

திடீர் என்று இரு ஒளிவிளக்குகள்!
பாம்பின் கண்களோ?

அந்த வெளிச்சம் கண்ணை கூசச் செய்ய, 007 தடுமாறி விழுந்தார்!
தலைசுற்றுகிறதே...
மயக்கம் தெளிந்தபோது...
நான் எங்கே இருக்கிறேன்?
வரவேண்டிய இடத்துக்குத்தான் வந்திருக்கிறாய்!

நீங்கள்... மிஸ்டர் மார்டின்தானே? ஜெர்மன் தொழிலதிபர்!
ஓ! என்னைத் தெரிந்திருக்கிறதே!
தண்ணீரிலும், தரையிலும் செல்லும் பெரிய வாகனம் ஒன்று தயாரித்திருக்கிறேன்! அதில்தான் இப்போது நீங்கள் இருக்கிறீர்கள்!

அப்படியானால், கடலில் தோன்றிய இராட்சதப் பாம்பு ஒரு வாகனமா?
ஆமாம்! நவீன மின்னணுக் கருவிகள் பொருத்தப்பட்டது!


மண்புழு போல தரையைத் தோண்டிக்கொண்டு போகக்கூடியது!
இப்போது கடலில் போய்க்கொண்டிருக்கிறோம், இல்லையா?

ஆமாம்! கப்பல் போலப் போகக்கூடியது!
அதேநேரம், நீர்மூழ்கிக் கப்பல் போல, கடலுக்கு அடியிலும் செல்லும்!
கடலுக்கு அடியில் போய்விட்டால், யாராலும் கண்டுபிடிக்க முடியாது!

உள்ளே வந்து பாருங்க!
இதன் விளக்குகள், சூரியன் போன்ற ஒளி படைத்தவை! நெருப்பைக் கக்கி, யாரையும் சுட்டு எரித்துவிடக்கூட முடியும்!!
அந்தக் கண்கள் வழியே குறி பார்த்து, குண்டுகளைப் பாய்ச்ச முடியும்!

குண்டுகள் தாக்குவதைத்தான், 'பாம்பு தாக்கிவிட்டது' என்கிறார்களா?
ஆமாம், ஜேம்ஸ்!

வானில் பாயும் ஏவுகணைகள், லேசர் கதிர், அணு ஆயுதங்கள்கூட இங்கே இருக்கின்றன!

இதெல்லாம் எதற்காக?
இந்த உலகமே என் கைக்குள் வரவேண்டும்! இட்லர் அடைந்த தோல்வியை நான் வெற்றியாக்கிக் காட்ட வேண்டும்!!
நீங்கள் பார்க்கவேண்டியது இன்னொன்றும் இருக்கிறதே! வாருங்கள்!!
மயங்கிய கோமா நிலையில் அந்தப் பெண்ணை வைத்திருக்கிறேன்!

ஓ! இவள் நாகதேவதை அல்லவா?
ஆமாம்! பாடகி நாகதேவதைதான்!!
இவளை என் இங்கே இப்படி வைத்திருக்கிறீர்கள்?
அவள் பாம்புகளை வைத்துக்கொண்டு அணுகுண்டு எதிர்ப்புப் பிரசாரம் செய்கிறாள்!
நானும் ஒரு பாம்பாட்டி! நான் செய்யும் வேலைகளுக்கு உலகம் இந்த நாகதேவதையைத்தானே சந்தேகிக்கும்?
உட்காருங்க! சாப்பிட்டுக் கொண்டே பேசுவோம்!



உங்கள் திட்டம்தான் என்ன?
அணுகுண்டு நிபுணர்களை அழித்து ஒழிப்பேன்! பிறகு என்னிடம் மட்டுமே அணுகுண்டு இருக்கும்.
அப்போது இந்த உலகமே என் காலடியில் வரும்!
சரி, ஜேம்ஸ்! இனி உங்களை என்ன செய்வது என்று பேசுவோம்!
ஒரு படகில் ஏற்றி, என்னைக் கரைக்கு அனுப்பிவிடுங்கள்!
அதற்கா என் இரகசியங்களையெல்லாம் உங்களிடம் சொன்னேன்!
டுமீல்! உங்கள் கதை முடியும்! உங்கள் உடல், கடலில் மிதக்கும்!
நான் சாவதற்கு அஞ்சவில்லை! ஆனால், பயன்படக்கூடியதை யாராவது அழிப்பார்களா?

உம்மைப் பயன்படுத்திக்கொள்ளத்தான் போகிறேன்! அந்தக் கப்பலைப் பாரும்! அது ஒரு அமெரிக்கப் போர்க் கப்பல்!
கடலில் பயிற்சியில் ஈடுபட்டிருக்கிறது இன்னும் சிறிது நேரத்தில் துண்டுகளாகச் சிதறி கடலில் மூழ்கும்!

அந்தக் கப்பலைக் கண்காணித்து, எல்லா ஏற்பாடும் செய்துவிட்டோம்!
குண்டு வீசவேண்டியதுதான் பாக்கியா?
அந்த வேலையை நீங்கள்தான் செய்யப்போகிறீர்கள்!

ஏவுகணை, குறி வைத்துத் தயாராக வைக்கப்பட்டிருக்கிறது.
நீங்கள் இந்த பொத்தனை அழுத்தினால் போதும்!
இதை யார் வேண்டுமானாலும் செய்யலாமே?
அமெரிக்க ஆதரவாளனான நீ செய்தால், எனக்கு இரட்டை மகிழ்ச்சி!
அதற்குப் பிறகும் ஒரு வேடிக்கை இருக்கிறது, ஜேம்ஸ்!

உன் வீர விளையாட்டைப் பார்க்க எனக்கு ஆசை!
அதோ பார்த்தாயா, ஒட்டிப்பிறந்த இரட்டையர்! இருவரும் மற்போர் வீரர்கள்!
இவர்களோடு நீ சண்டை போட வேண்டும்!
வர்றியா?
வந்து பார்!

ஜேம்ஸ்! உங்களால் இவர்களை வெல்ல முடியுமா? முயற்சி செய்யுங்கள்!
திடீர் என்று இரட்டையர், ஜேம்ஸ் மீது பாய்ந்தார்கள்!
சொய்ங்!
ஜேம்ஸ் திணறிப்போனார்
ஒ...

ஜேம்சைத் தூக்கி வீசினார்கள்!
பலே!
ஜேம்சுக்குத் தலையில் பலத்த அடி!
ஆ!

ஜேம்ஸ் கஷ்டப்பட்டு எழுந்தார்!
வா... வா, மிஸ்டர்!
ஜேம்ஸ், செடி இருந்த ஒரு சிறு தொட்டியைத் தூக்கினார்!


இரட்டையர் மீது வீசினார்!
சொய்ங்!

ஒருவன் தலையில் அது அடித்தது!
ஆ!

அடுத்தவன் மோத வந்தான்!
வா!
படார்!
அவனும் அதிர்ந்தான்!

ஜேம்ஸ் புகுந்து விளையாடினார் !
இந்தா வாங்கிக்கொள் ! உனக்கு ஒண்ணு...
கோழைகள் ! உன்னைக் கொல்ல அவர்களால் முடியவில்லையே !
உடல் பலம் போதாது ! மனபலம் வேண்டும் !!
அவர்களை நீயே கொன்றுவிடு !
பக்கத்தில் நெளிந்துகொண்டிருந்த மலைப்பாம்பைப் பார்த்தார், ஜேம்ஸ் !
கொன்றுவிட வேண்டியதுதான் !

ஜேம்ஸ், மலைப்பாம்பைத் தூக்கி மார்ட்டின் மீது வீசினார்!
முதலில் உன்னை ஒழிக்க வேண்டும்!
மார்ட்டின் கழுத்தில பாம்பு சுற்றிக்கொண்டது!
எங்கே என் துப்பாக்கி?
இதோ இருக்கிறது!
துப்பாக்கியை ஜேம்ஸ் எடுத்துக்கொண்டார்!
உயிர் போகிறது! உதவி... உதவி...!!
உங்களுக்கு உயிர் மீது
இருக்கிறதா?

எங்களைக்
கொன்றுவிடாதீர்கள் !
அப்படியானால்,
என்னோடு வாருங்கள் !


வானொலியில் செய்தி வந்தது!
என்ன செய்தி?

அமெரிக்கப் போர்க் கப்பலை
கடும் அளவு நெருங்கிவிட்டோம்!
நான் அங்கே வருகிறேன்
ஜேம்ஸ், நாகதேவதையிடம் வந்தார்
இவனை வெளியே எடுங்கள்!

வெளியே எடுத்தார்கள்.
ஜேம்ஸ்! நீங்களா? என்னைக் காப்பாற்றுங்கள்!
மார்டின் இறந்துவிட்டார்! அவரது ஆட்களை சமாளிக்க வேண்டும்!
பாஸ் எங்கே?
பின்னே வருகிறார்!

கேப்டன், நான் சொல்லுகிறபடி செய்யுங்கள்! அந்த பொத்தானை அழுத்துங்கள்!
அதை அழுத்தினால் நமது நீர்மூழ்கி, கடலுக்கு மேலே வந்துவிடும்!

அமெரிக்க வீரர்கள் பார்த்தால், நம்மைத் தாக்குவார்கள்!
அப்படியானால், அதற்குள் நாம் தப்பிவிடுவது நல்லது!

எல்லாரும் கிளம்புங்க!



திலிருப்பவர்கள் உதவி கேட்பது போலத் தோன்றுகிறது!
கேப்டன். குதியுங்கள்!
ஏன்?

நாமும் குதிக்க வேண்டியதுதான்!
பாம்பு வெடித்துச் சிதறப் போகிறது!
எல்லாரும் கடலில் குதித்துவிட்டார்கள்!

அவர்களைக் காப்பாற்ற வேண்டும் !
கப்பலை உடனே கிளப்புங்கள் !
நான் லண்டன் இரகசியப் போலீஸ் ஜேம்ஸ்பாண்டு 007.
வாருங்கள், ஜேம்ஸ்பாண்டு !

ராணி ஸெண்டிகேட் சார்பில் அச்சிட்டு வெளியிட்டவர்: சி. கல்யாண சுந்தரம், ராணி பிரஸ், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007. ஆசிரியர்: அ.மா. சாமி, 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.

அடுத்த காமிக்ஸ்

Cowboy Story

பென் ஹன்ட

வண்ணப் படக்கதை

ஊற்றுநீரை நஞ்சாக்கிய கொடியவர்கள்!
விளைநிலத்தை மீட்டது எப்படி?

ஏப்ரல் 1-ந்தேதி "ராணி காமிக்ஸ்" பாருங்கள்!

"ராணி காமிக்ஸ்", சென்னை-600 007.

Regd.with the Registrar of Newspaper
for India under No. 42576/84 - ISSN 0971 - 8567

January 16, 2005.

RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)

தினத் தந்தி

வழங்கும்

வெள்ளி தோறும்

சிறுவர் தங்கமலர்

- ★ அட்டையில் உங்கள் குழந்தையின்படம்
- ★ புராண படக்கதை
- ★ துப்பறியும் படக்கதை
- ★ குழந்தைகளுக்கு அறிவியல் தகவல்கள்
- ★ மாயாஜால சிறுவர் தொடர்கதை
- ★ சிறுகதைகள்
- ★ பொழுதுபோக்கு அம்சங்கள், புதிர்கள், விடுகதைகள்

தினத்தந்தியுடன்

வெள்ளி தோறும் வண்ண புத்தகம் இலவசம்

உங்கள் கடைக்காரரிடம் கேட்டு வாங்குங்கள்